# 3 தனித் திறமை

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

கேள்வி 1.
தகுதி இச்சொல் உணர்த்தும் பொருள் ____________________ .
அ) தரம்
ஆ) மரம்
இ) கரம்
ஈ) வரம்
விடை:
அ) தரம்

கேள்வி 2.
பகைவர்கள் இச்சொல்லின் எதிர்ச்சொல் ____________________ .
அ) நண்பர்கள்
ஆ) எதிரிகள்
இ) அயலவர்கள்
ஈ) சகோதரர்கள்
விடை:
அ) நண்பர்கள்

கேள்வி 3.
பணி இச்சொல் உணர்த்தும் பொருள் ____________________ .
அ) வாழை
ஆ) வேளை
இ) வேலை
ஈ) வாளை
விடை:
இ) வேலை

கேள்வி 4.
படைத்தளபதி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
____________________ .
அ) படைத் + தளபதி
ஆ) படை + தளபதி
இ) படையின் + தளபதி
ஈ) படைத்த + தளபதி
விடை:
ஆ) படை + தளபதி

கேள்வி 5.
எதை + பார்த்தாலும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும்
சொல் ____________________ .
அ) எதைபார்த்தாலும்
ஆ) எதபார்த்தாலும்
இ) எதைப்பார்த்தாலும்
ஈ) எதைபார்தாலும்

விடை:
இ) எதைப்பார்த்தாலும்

## வினாக்களுக்கு விடையளி.

கேள்வி 1.
காட்டில் விலங்குகளின் கூட்டம் யார் தலைமையில்
நடைபெற்றது?
விடை:
காட்டில் விலங்குகளின் கூட்டம் புலிராஜாவின் தலைமையில்
நடைபெற்றது.

---

கேள்வி 2.
புலிராஜா, படைத்தளபதி பொறுப்பை யாருக்குக் கொடுத்தார்?
விடை:
புலிராஜா, படைத்தளபதி பொறுப்பை சிங்கக்குட்டிக்குக்
கொடுத்தார்.

கேள்வி 3.
ஆந்தைக்கு என்ன பதவி கொடுக்கப்பட்டது?
விடை:
ஆந்தைக்கு இரவு காவல் அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது.

---

கேள்வி 4.
கரடி எந்தெந்த விலங்குகள் தகுதியற்றவை எனக் கூறியது?
விடை:
ஆமை, முயல், கழுதை ஆகிய விலங்குகள் தகுதியற்றவை எனக் கரடி கூறியது.

---

கேள்வி 5.
இந்தக் கதையின் மூலம் நீ அறிந்து கொள்வது யாது?
விடை:
ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்திறமை உண்டு. அதனை அடையாளம் கண்டு அதற்கேற்ற பொறுப்பை அவருக்குக் கொடுக்க வேண்டும்.

---